339

ஆலந்தூர் ஒரிஜினல்

கம்பெனி உபாத்தியாயர் வித்துவான் வேலூர்
நாராயணசாமி பிள்ளை அவர்கள் விருப்பத்தின்படி

அரிச்சந்திரன்
திருப்புகழ் காவடிச்

சிந்து.

மகா-௱-௱-ஸ்ரீ விரகாலூர்

சுப்பையயாப் பிள்ளை

அவர்கள் இயற்றியது.

மதுரை வடக்காவணிமூலவீதி, புத்தகவியாபாரம்

இ. ராமசாமிக் கோனாரால்,

…ச்ஸெல்ஸியர் பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது.

1924. [அணா 4.

O-/IMSP, A
N24
18104

அம்பாசமுத்திரம் வக்கீல் மகா-௱-௱-ஸ்ரீ

எச். டி. சுப்புசாமி அய்யரவர்களாலியற்றப்பெற்ற

ஸ்ரீராமாயணச்சிந்து.

ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி லீலைக்கும்மியும் கூடியது.

மூவடியளந்தோன் சேவடிபோற்றும் பாவடியார்கள் பக்திக்கேற்பக் காவடிச்சிந்து வர்ணமெட்டுகளில் எழுதிய பாடல்கள். பக்திமான்களும் உத்தமமங்கையரும் பக்தியோடிதனை நித்தம் படித்தால் முத்தியும் பெறுவர். நினைத்த காரியம் சித்தியும் பெறுவர் என்பதில் ஐயமில்லை. விலை அணா 3.

ஹிப்னாடிஸம் மெஸ்மெரிஸம், என்று வழங்கும் வசிய சாஸ்திரம்.

நம் முன்னோர்களான மஹாரிஷிகளால் அப்பியாசித்துச் சிறப்படையப் பெற்ற இப்புத்தகத்திற்கூறிய முறைகளைச்சரிவர அப்பியாசித்து வருவோர்க்கு தேவவசியம், மானிடவசியம், உலகவசிவம், ஜனவசியம், தனவசியம், மிருகவசியம், இந்திரஜாலம், மஹேந்திரஜாலம், முதலிய வித்தைகள் விரைவில் சித்தியாகும். பேய் பிசாசுகளை இலகுவில் ஓட்டலாம். விஷம் முதலிய நோய்களை இலகுவாய் நீக்கலாம். "ஜலமேல் நடக்கலாம், தனல்மீதிருக்கலாம், தன்னிகரில் சித்தி பெறலாம் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. சித்திரப் படங்களுடன் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

விலை ரூ 1-8-0

தேவதா சித்தி யென்னும் மலையாள மாந்திரீக ரத்னாகரம்.

புதிதாய் வெளிவந்த அற்புதமான நூல்.

ஏராளமான சக்கரங்களடங்கி யுள்ளது.

மனைகள்தோறும் அவசியம் இருக்கத் தக்கது.

இதில் தேவதாவசியம், உலகவசியம், வியாபார வசியம், தனவசியம், மெஸ்மெரிஷமென்னும் மனோவசியம், மிருகவசியம், பதினெண்வகை பூதகண பேதங்களென்னும்பேய் பிசாசுகளை ஆட்டுதல், அவைகளை ஒட்டுதல், பாம்பு தேள முதலிய விஷஜெந்துக்களின் விஷங்களை நீக்குதல், பாலகிரகதோஷ பரிகாரங்களுக்குள்ள மந்திரங்கள் முதலிய இன்னும் அநேகவித அருமையான மந்திரங்கள் தெளிவான சக்கரங்களுடன் அடங்கியிருக்கின்றன. (தற்புகழ்ச்சியன்று) புத்தகத்தை வாங்கிப் பார்ப்பவருக்கே உண்மை விளங்கும்.

முதற்காண்டம் 8 பாகங்களடங்கியது ரூ 1.

2-ம் காண்டம் 8 பாகங்களடங்கியது ரூ 1.

இரண்டு காண்டங்களும் ஒரே தடவையில் வாங்குவோருக்கு விலை ரூ 1-8-0.

உ

செந்தமிழ்சரபம் வீரகாளூர்

சுப்பையாப் பிள்ளை

அவர்களியற்றிய,

அரிச்சந்திரன் திருப்புகழ்காவடிச்சிந்து

இ. ராமசாமிக்கோன்,

புக்ஸெல்லர், பப்ளிஷர், வடக்காவணிமூலவீதி.

மதுரை, எக்ஸெல்ஸியர் பிரஸில்,

பதிப்பித்தது.

1924.

விலை அணா] ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. 0—3—0

23 APR 1924

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ரிஜிஸ்தர் அறிவிப்பு.

———:(o):———

இதனால் சகலமான புத்தகவியாபாரிகளுக்கும், அச்சுகூடத் தலைவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:—

செந்தமிழ்ச்சரபம்-விரகாலூர் சுப்பையாப் பிள்ளையவர்களியற்றிய அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச்சிந்து என்ற இப்புத்தகத்தை இ. ராமசாமிக்கோனாராகிய என்னால்சகலபாத்தியதையுடன்பெற்று, அச்சிட்டு காபிரைட் ரிஜிஸ்டர் செய்திருப்பதால், இப்புத்தகத்தை யாவது, இதிலுள்ள பாடல்களில் எதையாவது யாரேனும் எமது உத்தரவின்றி அச்சிடுவரேல், என்னால்கோரும் நஷ்டிக்கும், கவர்ன் மென்ட்காபிரைட்சட்டத் தண்டனைகளுக்கும் உட்படுவார்கள் என்பதை இதன் மூலமாய்த் தெரிவித்திருக்கிறேன்.

இங்ஙனம்,

இ. ராமசாமிக்கோன்,

பப்ளிஷர், புக்ஸெல்லர், வடக்காவணிமூல வீதி,

மதுரை.

செந்தமிழ் சரபம் விரகாலூர்

மகா-ள-ள-ஸ்ரீ சுப்பையாப்பிள்ளை அவர்களாளியற்றிய,

கோவலன் சரித்திர திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0
நல்லதங்காள் சரித்திர திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0
அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0
பதிவ்ருதா சத்தியவான் சாவித்திரி திருப்புகழ்	0	4	0
இராமயணத்திருப்புகழ் இலங்காதகன காவடிச்சிந்து	0	2	0
சிதம்பரம் நடராஜா நடனத்திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0
ஞான சௌந்தரி திருப்புகழ் காவடிச்சிந்து 2 பாகம்	0	2	0
அல்லியரசாணி சரித்திர திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0
பாண்டவாள் சரித்திர பாரதக் காவடிச்சிந்து திருப்புகழ்	0	4	0
பரமன்திருமால் மருகன் பக்திரச கீர்த்தனை	0	4	0

சு. துரைசாமி படையாச்சியார் அவர்களியற்றிய,

பாகவத திருப்புகழ் காவடிசிந்து	0	3	0
சப்தகாண்டம் இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து	0	3	0
ஸ்ரீபாகவத குசேல பக்தாநந்த சரித்திரத்திருப்புகழ்	0	4	0
பார்வதி சத்யவான் சாவித்திரி சரித்திரம்	0	4	0
வள்ளி சுயம்வரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	4	0

உ

சிவமயம்.

அரிச்சந்திரன்

திருப்புகழ் காவடிச் சிந்து.

விநாயகர் துதி வெண்பா.

பூமே லரிச்சந்த்ர பூபன் திருக்கதையைப்
பாமே வருந்தமிழிற் பாடவே—மாமேவு
சத்திக் கணபதியே சாமி தயாநிதியே
அத்தி முகப்பதியே யாள்.

வெள்ளிமலை யோத்தபலமேடை என்ற வர்ணமெட்டு.

ஐங்கரனே சங்கரனின் பாலா எங்க
ளாறுமுகனுக் கதிக லோலா முந்தி
அந்தண ருந்தவருஞ் சிந்தையினி னைந்திறைஞ்சுங்
குருவா கிய ஒருவா

மங்களமா வல்லபையின் மாரா இந்த
மண்ணுலக மெண்ணுமதி காரா சொலு
மங்கையுமை யாள்மடியில் தங்கிவிளை யாடுங்கண
நாதா குண நீதா

எத்திசையும் போற்றுமக ராசன் விண்ணி
லிந்திரனு கந்தபிர காசன் நாளு
மினியதவ வசிட்ட முனியைக் குருவெனக்கொண்
டாண்டோன் புகழ் பூண்டோன்

சத்தியவ ரிச்சந்திரன் காதை தன்னைச்
சாற்றிடுஞ்சுப் பையனுக்குப் போதை யாவுந்
தானளித்தர வாவிதுநல் வேளைபணிந் தேன்துணைசெய்
வாயே கதி நீயே

சுப்பிரமணியர் துதி.

பாவையரே பள்ளமேடு என்ற வர்ணமெட்டு.

வேலவனேஉந்தன் பாதம்வேண்டினேனுனே இந்த
வேளையென்னை யாளவரவேணும் நீதானே (வடி)

ஞாலமிசை யுன்னையேநா னம்பினேன்முருகா நல்ல
ஞானந்தருவாய் பணிந்தேன் நாரணன்மருகா (வடி)

வஞ்சநமன் வாதையினல் வாடிடாமுன்னம் நீர்
வந்திங்கென்னைக்காக்க வென்னவர்மமோவின்னும் (வடி)

அஞ்சலெனநஞ்சமுண்ட ஆரணன்மகனே எனக்
காருமுனையன்றி யுண்டோ ஆதரிகுகனே (வடி)

அன்றெதிர்த்த சூரபத்மன் ஆவியையுண்டாய் அன்றி
அந்தவேட மாதுமீது மாசையுங் கொண்டாய் (வடி)

நன்றுமயில்வாகனத்தை நடத்திடுந்தேவா மனம்
நாடியே சுப்பையனின் முன்னுகவே நீவா (வடி)

இசைந்தசூலம் என்ற திருப்புகழ் மெட்டு.

கருத்ததேகன் கனலுறுபார்வையன் கடுங்கோபன்
கரத்திற்பாச னெருமைக்கடாஉடை. எமராசன்
வருத்தமான நரகிடைவீழ்ந்தெனை வருத்தாமுன்
வலித்தமாயை அறவடியேனிடம் - வருவாயே
நிருத்தமாடும் பரன்தருபாலக வமரேசன்
நிலைத்தவாழ்வு பெறவருளேவிய நெடுவேலா
திருத்தநாலு மறைபுகழ்நாயக புவிவாழ்வில்
திகைத்ததாசன் சுபையனையாண்டிடு முருகோனே

தேவசபை.

இந்திரன் முனிவர்களை வினவுதல்.

மருவேசெறித்த குழலால் என்ற வர்ணமெட்டு.

கடலேவளைந்த புவிமீதிருந்து
கடையானபொய்மை அறியாத

திடமானநெஞ்ச ருளராயினிங்கு
தெளிவாயறிந்து புகழ்வீரே
வடவாலமர்ந்து சனகாதியர்க்கு
வரமோனசித்தி அருளுநதன்
மடமாதுசத்தி மணவாளன்பத்தி
மறவா தசித்த முனிவோரே

வஸிட்டமுனிவருக்கும்விஸ்வாமித்திரருக்கும் தர்க்கம்.

பாதிராத்திரிவேளையில் என்ற மெட்டு.

வஸிஸ்டர் சொல்லுவது.

பொன்னகர்க்கிறை யானதேவேந்திர
பூபனேசொல்லக் கேளும் புகழ்
பூணயோத்திலை யாளும் எங்கும்
போற்றரிச்சந்திர னும் ஒரு
பொய்யுரைத்திடா னன்னவன்கையிற்
போந்ததுசத்திய வாளும்

மன்னனுமவன் நாமமோர்தவே
வந்தபாதகம் போகும் அந்த
மாநகர் தன்னிற் சாகும் எந்த
மாந்தர்க்குமுத்தி யாகும் அங்கு
மானும்வேங்கையு மோர்குளத்தினில்
வந்துநீர்குடித் தேகும்

விஸ்வாமித்திரன் சொல்லுவது.

நல்லவாசகஞ் சொல்லலாயினை
நாணயத்துட னய்யே நன்கு
நாடிநீயுரை செய்யே சொல்வான்
நாளைக்காயிரம் பொய்யே அவன்
நடத்தையாவையு மெடுத்திங்கோதிட
நானுவாய்தலை மெய்யே

வஸிஸ்ட்டர் சொல்வது.

விண்ணவர்சபை முன்னிலேவசை
வீணிலேனுரைத் தாயே ஆஹா

வெந்துபோகுமுன் வாயே அவன்
மேன்மையையறி யாயே அந்த
வேந்தைப்போலுமெய்ச் சாந்தம்வாய்ந்தவர்
வேறுண்டோபுகல் நீயே

விசுவாமித்ரர் அரிச்சந்ர ராஜனிடத்தில் யாகத்திற்குப் பொன் கேட்குதல்.

பாதி மதி நதி என்ற வர்ணமெட்டு.

ஆதி மனு முறை யோது நெறியுல
காளு மதி பதி யர சேகேள்
ஆன பவ மற யாக மதுசெய
ஆசை யுட னினைந் தடைந் தேனே
சாதி மத கரி மீதி லெழு கிற
வீசு கவ ணெறி யள வா நீ
சால விதி யிது வேளை யுதவிட
வேணு முனை யல தறி யேனே

அரிச்சந்திரன் சொல்வது.

சோதி அன வுரு வாகி அயனறி
யாத மொழியிறை யவன் தாளே
சூடுமுடியுடை கோசிக முனிவ
நாத துய ரினை விடு வீரே
நீதி யும துள மான பலநிதி
தாமத மனியில் தருவேனே
நீரு மிக மகிழ் வாகவினிதெடுத்
தேகி மக மியற் றிடுவீரே

விசுவாமித்திரர் அரிச்சந்திரன் முடியை யுதைத்தல்.

தர்க்கம்.

மலடிவயிற்றுமகன் என்ற வர்ணமெட்டு.

விசுவாமித்திரர்.

புவ்னமளிக்குங் குடையானே இந்த
அவலநடத்தை யுனக்கேனே உனில்
பொறுமையனைத்தும் விடுத்தேனே முடி
உதைத்தேனே

அரிச்சந்திரன்.

அமலதவத்து முனிநாதா பதக்
கமலமுனக்கு வருந்தாதா இந்த
அடிமைமினைப்புந் தெரியாதா குறை
எனவாதா

விஸ்வாமித்திரர்.

மிருகமனைத்து மழித்தாயே பெண்கள்
மருவவழைக்க வடித்தாயே உயிர்
விலகவொருப்பன் றியைப்போயே கொலுந்
திறனீயே

அரிச்சந்திரன்.

பயிரையழிக்க வதைத்தேனே நடஞ்
செயிரு பரத்தை யணைகோனே எனப்
பதறி தூரத்தி விடநானே புரிந்
தனன்தானே

அரிச்சந்திரன் சந்திரமதி தேவதாசனுடன் காசிக்குப் போகப்புறப்படுதல்.

பூமிமேச்சிடு மண்ணுமலே என்ற வர்ணமெட்டு.

நாடுநகர்செல்வம் யாவுமாமுனிவர்க் கன்னமே அடி
சொன்னமே தந்தே
னின்னமே இங்கு
நாமிருக்கஞாய மோபுறப்பட்டாலென் சின்னமே என்
சின்னமே

சந்திரமதி சொல்வது.

மன்னவரேயுமது பின்னதாகமறு	தேசமே	செல்ல
	நேசமே	இலை
	தோசமே	பெற்ற
மைந்தன் லோகிதனை டந்துபோதல்பிர	யாசமே	பிள்ளைப்
	பாசமே	

அரசன்சொல்வது.

மங்கையேமதிம யங்கிவாடவிதி	வந்துதே	நடை
	பிந்துதே	வேர்வை
	சிந்துதே	அந்த
மாசிலாநகர் காசிபோகமன	முந்துதே	மெய்வ
	ருந்துதே	

சந்திரமதி சொல்வது.

யாதனுகினுமஞ் சாதனுபவிக்க	வேணுமே	துன்பம்
	மாணுமே	இன்பம்
	பூணுமே	மேலர்
யாவராயினும்விடாதுஊழ் வினைமுன்	தோணுமே	வன்மை
	காணுமே	

அரசன் சொல்வது.

சென்றுகாசிநகர் மன்னுநாதனடி	பூசிப்போம்	துணை
	யாசிப்போம்	துதி
	வாசிப்போம்	வளர்
தீமுனீகடனை நாமிறுக்கவழி	யோசிப்போம்	வினை
	கூசிப்போம்	

சந்திரமதி சொல்வது.

என்னரும்பிரிய மன்னவாவருந்த	நேரமோ	இது
	தீரமோ	அலங்
	காரமோ	ஜெக
தீசன்மேலிருக்க னுமக்கதிவி	!சாரமோ	கடன்
	கோரமோ	

நட்சத்திரையன்

அரிச்சந்திரமகாராஜனுக்குக் கிட்டிகட்டுகிறது.

தர்க்கம்.

தோந்திசரிய மயிரே என்ற வர்ணமெட்டு.

நட்சத்திரன் சொல்வது.

இந்த உலகி னரரே புகழுமரிச்
சந்த்ர னெனு மொரரசே முனிகடனை
என்று தருவ தினியே தரைசிமிஷம் பொறுக்கேனே

அரசன் சொல்வது.

வந்த மறைவ லவரே முனிகடனைத்
தந்து விடுவ னினியே தவணைதனில்
வண்ண முடைய பதிகா சிநகரிடை தவறேனே

நட்சத்திரன் சொல்வது.

இல்லை யெனும வரையே சொலிவிடவித்
தொல்லை வருவ திலையே தவணையேதுக்
இந்த வசனம் நிசமே விரைவிலகன் றிடுவேனே

அரசன் சொல்வது.

எந்த னுயிரை விடுவே னெனினுமது
சிந்தை யறிய வரையே னுமதடிமை
இந்த நகரி னிதியே தருவனடி பணிந்தேனே

நட்சத்திரன் சொல்வது.

கிட்டி தனையுன் கரமே யுறவிறுகக்
கட்டி விடவி சனமே னிருகிதியைக்
கொட்டி விடுவென் னிடமே யுனதருகில் வருகேனே

அரசன் சொல்வது.

மெத்த வலிவ ருகுதே கரமதிலி
ரத்த மதுபெ ருகுதே திணையளவு
சித்த மிளக விலையே யடிமையிது பொறுப்பேனே

பட்ச முளபு னிதரே முனிவர்விடு
நட்சத் திரத ரகரே சிறிதுதயை
பண்ணு மெனது உயிரே தளருதினி சகியேனே

காசி விசுவநாதரைத் தரிசித்தல்.

இசைந்தசூலம் என்ற வர்ணமெட்டு.

விளங்கு மாசந் திரவிதிதேவியஞ் சுகமானே
விழைந்து காசி நகரிடைமேவிய விசுவேசன்
இளங்கு மாரி மலைமகளாள்கிற விடப்பாகன்
இரண்டு பாதங் கதியெனவீழுவ மினிதாக
களங்க மான மனமுடையாரிட மணுகாது
கலங்கி வாடும் பரிவுடையாரக மடுநேயம்
உளங்கு லாவ நினைவுறவேவினை தொடராது
உறைந்த தீமை மறுவிடந்தேடிடு முணர்வாயே

முனிவர் கடனுக்காகச் சந்திரமதி அடிமைப்படச் சம்மதிக்க அரசன் வருந்துதல் தர்க்கம்.

மஞ்சுநிகர் குந்தள என்ற காவடிச்சிந்து வர்ணமெட்டு.

அரசன் சொல்வது.

என்னவித மாயுனே நானே மனந்துணிந்து கனந்தணிந்து
இன்றுவிலை கூறுவேன் மானே ஐயோ
என்னயோசனை பண்ணினேனடி
சின்னமேவரும் பின்னமேயறி
இந்தக்கதி யாகி வாடவும் ஈசனினைவோ பாசவினையோ
ஏங்குதே யென்னெஞ்சு நாடவும்

சந்திரமதி.

ஒன்றுமறி யாதவர் போல உரைப்பதென விருப்பமுடன்
ஒப்பவிலை கூறுவீர் சால தூய
ருள்ளமேவிய வள்ளலேசிறு
பிள்ளைபோலழு தென்னகாரிய
முள்ளவிதி போல் நடக்கட்டும் முனிகடனும் தரகன்செய
லுற்றவேதனையுந்தீ ரட்டும்

அரசன் சொல்வது.

கண்மணியேசந்த்ரவதியே உந்தனைவிற்று மைந்தனைவைத்துக்
காலங்கழிப்பேனோ விதியே இந்தக்
கட்டகாலம்வந் திட்டதேயென
கெட்டபாதையை நத்தினூற்பரி
காசஞ்செயு வார்பலர் பேசி எனையனைய புவியரசர்
காரியுமிழ் வார்களே ஏசி

சந்திரமதி சொல்வது.

சொந்தமணவாளனைப் பேணும் மனைவியரே குலமகளச்
சொற்படிநடந்திட வேணும் மனச்
சோகமேதினி வேறு யோசனை
ஏது தாமத மேசெயாதெனைச்
சொல்லிவிலைகூறுவீ ரின்று முனிகடனை தவணையது
சோருமுன்னமீதலே நன்று

அரிச்சந்திரன் சந்திரமதியை விலைகூறல்.

கருவினுருவாகி வந்து என்ற வர்ணமெட்டு.

திருவனைய ளானசந்த்ர மதியெனுமென் தேவிதன்னைத்
தெருவில்விலை கூறவந்தே னறிவீரே
திரவியம தீயுமெந்தக் குலமனித ரேனுமிந்தத்
தெரிவைதனை யேயழைத்துச் செல்லாமே
தருமகுண மாதுமித்த மரியமனை வேலைமுற்றுந்
தளருதலி லாது செய்யத் தவறாளே
தயைபொறுமை நீதியன்பு நயவசனமான கற்பு
தழையுமறி வானமங்கை இவளாகும்
வருமமுனி மாயமுற்ற பொருள்நகர நாடுவிட்டு
வருகவிதி யானதிங்கு மதிசோர
வலியகடன் தீரவந்த தரகன்கலி மாறவிற்க
மனதுதுணிந் தேனரச னடியேனே

சந்திரமதியைக் காலகண்டர் விலைக்குக் கேட்குதல்.

மருவுமனை யாளையிந்தத் தெருவில்விலை கூறுகின்ற
மனிதனெவன் மாதுமென்ன விலைதானே
மனமறிய நீயுரைக்குந் தனமதனை யீவனின்று
மகிழுடைகு வாயுளத்தி னினிமேலே

அரிச்சந்திரன் சந்திரமதியுடன் பிரிவைப்பற்றி வருந்துதல்.

செந்தின்மானகரந்தனில் என்ற வர்ணமெட்டு.

மங்கையேஉனை விட்டுப்பிரிந்திந்த
மானிலமீதிலெவ் வாறு தனி
நானிருப்பேனடி கூறு முனி

வஞ்சமேயிது கொஞ்சமேனுநன்
னெஞ்சமேயிலர் தஞ்சமேயிலை

மன்னனு னுயி ரோடிருந் தேயினி
வாழ்வது நிச்சய மாமோ வந்த
ஊழ்வினையும் விட்டுப் போமோ

சந்திரமதி சொல்வது.

மன்னவா அரு மைத்துரை யேமனம்
வாடிடவுமென காலமோ எனைத்
தேடிவந் தாள்வதித் தூலமோ உயிர்

வானமீதெழு சாபமேமிக
ராகுமே என தாவிபோகுமுன்

வந்துகூடிம கிழ்ந்திடு வேனோநம்
மைந்தனோடு முமைத் தானே இனி
எந்தவிதமறப் பேனே

அரசன் சொல்வது.

கொஞ்சநாமிரு பேருமிருந்திடக்
கோசிக மாமுனி ராசன் உடன்
காசியில்வாழ்விசு வேசன் மனங்

கொள்ளவில்லைபி ரிந்து போகவெ
னுள்ள மஞ்சிவ ருந்துதேயெனக்

கோபமோ அந்தப் பாபிஅயனுக்குங்
கோரவி திகணித் திட்டனன் மன
மார மயங்கிட விட்டனன்

சந்திரமதி சொல்வது.

பஞ்சபாதகஞ் செய்தனமோ விந்தப்
பாடுபட விதி யாச்சுதே சொந்த
நாடுநகர் பொருள் போச்சுதே நல்ல

பானுநீருமி ருந்தவாறென
மாலைசூடிம கிழ்ந்தநாள்முதல்
பந்தமாயிரு வோரும்பிரிவின்றிப்
பட்சமுடனிருந் தோமே இப்போ
தச்சமடைந்தனம் நாமே

காலகண்டர் வீட்டில் சந்திரமதி பணிசெய்து வருந்துதல்.

வங்கார மார்பிலணி என்ற வர்ணமெட்டு.

மண்ணாளு ராஜகுல மீதுமக வாயுதித்துக்
கண்ணான காவலனை மாலைபுனைந் தேமகிழக்
கல்லான தீபமனக் கோசிகனு மோசநினைந் திடலாலே

தண்ணாடு வீடுநிதி யாவுமிழந் தேவருந்திப்
புண்ணாகிக் காசிவர வேகடனுக் கேதரகன்
தண்டாது பேசிவலி வாதைசெய நாதனெனை விலைகூற

பெண்ணான நானடிமை யாயுருகக் காலகண்டி
நண்ணாத வேலைசெயு மாறுசொலி யேசகிதம்
பின்னோடு பாலகனுங் கூழதனுக் காயழுது மதிசோர

பண்ணாத பாதகமி யாதுபுரிந் தோமுமையு
மெண்ணாத பாவிபல ஈதுவிதி நீவிடவும்
பற்றாவு னாதரவு மேதருக வேணுமுல கிறையோனே

காலகண்டர் தேவதாசனைக்காட்டுக்கனுப்புதல் தர்க்கம்

வெள்ளிமலை யோத்தபல என்ற வர்ணமெட்டு.

(கால) சந்திதரு மைந்தனேயின் றோடி வனங்
தன்னிற்சமி தைதருப்பைத் தேடிக் கொண்டு
தாமதமி லாமனகர் வேதியர்கு மாரருட
னீயே வரு வாயே

(தேவ) வேதியரே பாதநமஸ் காரம் நீர்
விட்டபணி செய்குவனின் நேரம் வன
மேவிச்சிறு பாலருட னேசமிதை சேகரித்து
நானே வரு வேனே

(தேவ) அம்மணியே என்பிரிய தாயே நம
தையருரை யின்படியே நாயேன் வன
மணுகித்த ருப்பைகொய்து வருகவிடை கொடுத்தி
டாயே பெற நீயே

(சந்தி) என்னசெய்வேன் கண்மணிலோ கிதனே உனை
எவ்விதம்விட் டுப்பிரிவேன் சுதனே ஐயோ
எனது வயிறு பற்றி யெறியுதுனையனுப்ப
யாதோ முனி சூதோ

(தேவ) அன்னையரே என்னினைவிப் போதே உள
மஞ்சிமிகச் சஞ்சலமு றுதே ஒரு
அல்லலணுகாதுவனஞ் செல்லவிடை நீகொடர
ஞரே அருள் வாரே

(சந்தி) காட்டுமிரு கங்கள் வருங் கூடி யதைக்
கண்டலறு வாயிறைந்து வாடி அப்பா
கவலைமிக வடைந்திங் கவலமுடன் புலம்ப
லாலேன் நொந்து போனேன்

சந்திரமதி தேவதாசனுக்குப் புத்திமதி புகட்டல்.

மலடிவயற்று மகன்போலே என்ற வர்ணமெட்டு.

(சந்தி) அடா-வனத்திலலைந்து திரியாதே விளை
புனத்தினடந்து மிதியாதே மன
வருத்தமடைந்து மலையாதே மிக
வருந்தீதே

அப்பா-சினத்தகரடி புலியானை சிங்கம்
கனைத்துவருகும் பெருங்கானே யங்கு
சிறுத்தைகிடக்குந் தெரிநானே உனக்
குரைத்தேனே

சூழ்-அனத்தை யருந்தி நடப்பாயே இனி
மனத்திலவல மொழிப்பாயே குகை
யடுத்துச்சமிதை யொடுநீயே இங்கு
வருவாயே

(தேவ) கனத்தைக்குறைக்கு மழுகாதே அம்மா
நினைத்து நினைத்து உருகாதே நம்
கருத்தன் பதத்தை மறவாதே துய
ரணுகாதே

பாம்பு தீண்டியதும் தேவதாசன் புலம்புதல்.

பூமிமெச்சிடும் என்ற வர்ணமெட்டு.

ஆசை நேசமுள்ள தோழமாரேயிங்கு வாருமே கையைப்
பாருமே கண்டு தேருமே பட
அரவஞ் சீறிவந்து விரலிலேகடித்த தோருமே என்னைக்
காருமே

ஐயய்யோஎனது கையுமெய்யுமிக வாடுதே விடஞ்
சாடுதே கால்தள் ளாடுதே எந்தன்
அன்னையாரைக்காண என்னமோநினைவு மோடுதே கனை
மூடுதே

பஞ்சையாக்கிவிட வஞ்சமாமுனிவன் கோலமோ இந்த்ர
ஜாலமோ கஷ்ட கா்லமோ பந்த
பாசமோடச்செயுங் காசிநாதனுக்குஞ் சீலமோ நெஞ்சு
மாலமோ

பெற்ற-தாயிடத்திலிதைப் போயுரைத்துமனந் தேற்றுவீர் துய
ராற்றுவீர் கண்ணீர் மாற்றுவீர் என்னைத்
தானடிமைகொண்ட காலகண்டருக்குஞ் சாற்றுவீர் செவிக்
கேற்றுவீர்

அசலாத்துப் பிள்ளைகளால் தேவதாசன் பாம்புகடித்திறந்தசெய்திதெரிந்த சந்திரமதி புலம்புதல்.

வேலனேயிந்த வீணனையேன் படைத்தாய் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பாசமாய்ப்பெற்ற பாலனை நானிழந்தேன் நான்
படுபாவியிப் புவிமீதிருப்
பதினலினிப் பலனேயிலே (பாச)

அநுபல்லவி.

காலகண்டையரி னேவற்படிதெற்பை
கடிதேபறித் திடகானக
மதிலேகிய குல லோகித (பாச)

சரணம்

நாடுநகரர சாட்சியுமிழந்து
தேடும்பொருள்மனை யாவுமேதுலைந்து
வாடும்படிப்பிரா ணேசனைப்பிரிந்து
மனமாழ்குதே இதுவேளையிற்
சினவாலர வதினலரும் (பாச)

கோசிகன்செய்திட்ட மோசத்தினலிந்தக்
காசிநகர்வந்திப் பூசுரன் பாங்கினில்
வேசியைப்போல்மனை வீட்டுவேலைசெய்தும்
மிகவேதனை யுறுபாதகி
வயிறுனது தனலாகிட (பாச)

அந்திப்பொழுதாயும் வந்திலானேயென்று
சிந்தைகலங்கினான் நொந்தழும்போதிங்கு
வந்தசிறுவர்கள் வாய்மொழிகேட்கவும்
மருளாயென துயிர்சோருது
விதியோ எவர் சதியோவரும் (பாச)

அப்பணியீசன் கடாக்ஷத்தினுல்வந்து
இப்படிமாளுவா யென்றறிகிலேனே
சுப்பையன் பாடிடச் சோகமிகுத்திட
சுதனே திரு மகனே நவ
மணியே என மடிதாவிடும் (பாச)

நாமாஜ கைஜி என்ற வர்ணமெட்டு.

அந்தணரேயென் மைந்தனும்பாம்பால்
ஆரணியத்தில் மாண்டனனும்
எந்தனவி எங்குதேபாவி
யானுமனுதி யாகினனே (அந்த)

மைந்தனைத்தகனஞ் செய்வதற்குரிய
மானிடராருங் காட்டிலில்லை
எந்தனுக்கிப்போ துத்தரவளித்தால்
ஏகித்தகனஞ் செய்திடுவேன் (அந்த)

தேசமிழந்தேன் சீரையிழந்தேன்
தேடியநாயகனையிழந்தேன்
ஆசைமகனையு மிங்கிழந்தேனிவ்
வடிமைமேற்கிரு பைபுரிவீர் (அந்த)

பாலனைக்கானில் தேடியெடுத்துப்
பண்ணியேதகன மாகதிரோன்
வேலையுதிக்கு முன்னம்வருவேன்
மீண்டுமனைக்கு நான் தவறேன் (அந்த)

நம்மனைவேலை யாவுமுடித்தேன்
ஞானமறையவ ரேயினிதே
உம்மனமிரங்கி உத்தரவளிப்பீர்
ஓதுசுப்பையன் பாடிடவே (அந்த)

சந்திரமதி கானகஞ் சென்று இறந்த மகனைத் தேடுதல்.

மஞ்சுநிகர் குந்தள என்ற வர்ணமெட்டு.

பஞ்சமாபாதகியும்நானே படஅரவம் கடித்திறந்த
பாலனைத்தேடவு மானேனே - ஐயோ
பங்கமாகவென் அங்கம் நோகுது
எங்குமேயிரு ளாகத்தோணுது
பாவிசெய்தேனேபெரு வஞ்சம் புலிகரடி கரிகளையும்
பார்க்கப்பயமாகுதே நெஞ்சம்
வஞ்சக முனிவனின் சூதோ பனியிருளில் தனிநடக்க
மாசனியன் காலமுமிதோ
மைந்தனேயருஞ் சுந்தராஉனை
இந்தராவினில் எங்குதேடுவேன்
வானமுன் கறுத்து மின்னுதே வழிதடங்கள் மறைவதனல்
வைக்கவே என்காலும் பின்னுதே
காலகண்டர் தன்னரண்மனை விடியுமுனங் குறுகிலனற்
கண்டித்திடுவாரே எந்தனை எப்போ
கண்டுமைந்தனைச் சென்று தூக்குவேன்
நன்றெரித்தும னைக்குமீளுவேன்
காசிவிசுவேசனே நீரும் எனதரிய மகனுடலைக்
கண்ணிற்காட்டியாளவே வாரும்
ஆலமரமும் மிதுதானோ அருகினருங் குகைபடரல்
ஆனவிடமு மிதுதானோ ஐயோ
அந்தவேதிய மைந்தரோதிய
இந்தக்கானம டைந்துவாதையுள்
ஆகவுஞ்சுப்பையன் சங்கையோ அரியதவ மிருந்துபெற்ற
ஆசைமகன்மாண்ட திங்கையோ

சந்திரமதி மாண்டமகனைக் கண்டெடுத்துப் புலம்பல்.

சாமி சோமசேகரனருளும் என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

பாழும் பாம்புதீண்டவோமகனே மாண்டாயோடா பெரும்
பாவியான என்னையினி வேண்டாயோடா

பொல்லா தீம்புமுனியா லிழந்தோம் சீமை சீமை தனி
தேம்பியழ விட்டதென்ன தீமை தீமை பாலா
வாம்புரவித் தேரையு மறந்தாயோடா பெரு
வாழ்வையுஞ் சுகத்தையுந் துறந்தாயோடா (பா)

அப்பா பத்துமாதமுஞ் சுமந்து பெற்றேனடா உன்னைப்
பார்த்துப் பார்த்து நானுருக லுற்றேனடா நான்
கத்திக் கதற வந்ததே காலம் காலம் இந்தக்
காரணத்திற்கோ பிறந்தாய் ஞாலம் ஞாலம் (பா)

அந்தப் பாவிமுனியெண்ணமும் பலித்ததோடா அட
பாலாலோகவாசையுஞ் சலித்ததோடா இங்கு
கூவியழுமென் முகத்தைப் பாராயப்பா உன்
கொஞ்சும் வாய்திறந்து மொழிகூறுயப்பா (பா)

அப்பா என்றுஉன்னழகுமுகங் காண்பேனடா நான்
இருக்கஞாய மில்லையினி மாண்பேனடா இன்று
உன்றனோடு நானுமடி வேனே பாலா தமிழ்
ஓதுஞ் சுப்பையன்பகர்சீ மானே லோலா (பா)

அச்சாமேரிலாகீச என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

அப்பாதேவ தாசாநானரும் பாவியானேண்டா
ஆனேண்டா ஆனேண்டா ஆ ஆ ஆ. (அப்)

இப்பாரிலுன்னைப் பெற்றே என்னசுகம் நானுற்றேன்
தப்பான பாம்பிற்கே தாரைவார்த்தாரு மற்றேன் (அப்)

உந்தன்பிதாவுக்கென்ன உத்தாரஞ் சொல்வேன்மைந்தா
இந்தாவுன் பின்வாரேன் என்னுவியும் மருந்தா (அப்)

கட்டிக் கரும்பே என்னைக் கண்ணூர நோக்கிலையே
பட்டாபி ஷேகமே பண்ணிநான் பார்க்கலையே (அப்)

இவ்வாறு நான்புலம்பி ஏங்கவிட்டாயே பாலா
எவ்வாறு தேருவேன் என்னசெய் வேண்டாசீலா (அப்)

நாதன் தனைப் பிரிந்தேன் நானிங்குனை யிழந்தேன்
பாதகி சுப்பையன் பாடிவாடப் பிறந்தேன் (அப்)

சந்திரமதி புலம்பல்.

எனை ஆண்டவா ஆருேந்தில்லே என்ற வர்ணமெட்டு.

பல்லவி.

அடபாலகா பாவிபெற்ற லோகிதா
பாராண்டி டாமலே நீமாண்டு போனையோ (அட)

அநுபல்லவி.

ஆலமுண் டவனருளாலே பிறந்தவென்
தப்பனே அப்பனே அப்பனே அப்பனே
அருமைகுலையப் பெருமைகலையக்
கருமவினையோ தருமமிலையோ (அட)

காட்டிற் சினந்தரவங் காணப்பட மெடுத்துக்
கடிக்க கடிக்க கடிக்க கடிக்க
கதறியழுது பதறித்தொழுது
உதறிவிழுந்து உயிரையிழந்து (அட)

பார்க்கப்-பார்க்க வயிறு பற்றியெ ரியுதெந்தன்
பவமா பவமா பவமா பவமா
பரதவித்திடும் படிவிடுத்திட
பரமனுக்கென குறைபுரிந்தனம் (அட)

நாளுஞ்சுப்பையயனேத நானிலத்திற்பிறந்து
நலிந்தேன் நலிந்தேன் நலிந்தேன் நலிந்தேன்
நானிருப்பதி லுலெனப்பல
னேயிறப்பது மேலினித்தவ (அட)

மயானத்தில்

அரிச்சந்திரனுக்குஞ் சந்திரமதிக்கும் தர்க்கம்.

கூட்டுறவுபேசி என்ற வர்ணமெட்டு.

அரி—ஆரடீ மாதே அர்த்த ராத்திரியிப்போதே
மாரடித்தஞ்சாதே மயானம் வந்ததேதே பெரு

மடத்தன மீதே பெரு
மடத்தன மீதே-அடி
வளர்த்தக்கினி சவத்தைச்சுடுங் களத்தனந்தீதே (ஆ)

சங்— நானொரு பெண்பாவி நலிந்தழுது கூவி
ஆனமகன் காவி லரவங் கடித்தாவி—அகன்
றழிந்தனன் மேவி உயிர்
அழிந்தனன் மேவி
அடுத்துவந்தேன் சுடப்புகுந்தேன் தடுத்தனை தாவி (நா)

அரி— காவல்தன்னை மீறி கனல்வளர்த்துத் தேரி
ஆவிதடுமாறி அழுந்துட்டநாரி—விரைந்
தகலுவாய்க் கோரி விரைந்தகலுவாய்க் கோரி
அடிவஞ்சகி உனக்கித்தனை சமர்த்தென நீலி (ஆ)

சங்— நீலியென்று பேசி நிராகரித்த தோசி
பாலித்திடுங்காசிப் பரமன் செயல்யோசி மனம்
பதைக்குது கூசி மனம்
பதைக்குது கூசி - சொந்தப்
பதிவிட்டுமே கதியற்றநா னொருபரதேசி (நா)

அரி— கதியற்றவ ளெனச்சொல்லினு மெரிப்பேனோ சீசீ

அரி— வாய்க்கரிசியோடு வரும்பணத்தைப்போடு
சேய்க்கொளுத்த நாடு சிலாக்கியத்தைத்தேடு மனந்
திகைப்பது பாடு மனந்
திகைப்பது பாடு - பொய்
திருக்கிப்பண மெனக்குத்தரா தெரிப்பது கேடு (ஆ)

சங்— கனப்புண்ணிய முனக்குற்றிடு மெனக்கில்லைவீடு

சங்— ஆருமற்று நானே அனாதையாகினேனே
கோரும்பொருள்தானே கொடுப்பதிற்கில்லேனே கனங்
குறைந்தவளானேன்-கனங்
குறைந்தவளானேன்

அரி— குலைப்பது வீணே-அடி
குலைப்பது வீணே

சங்— கொளுத்தத்தயை புரிசுப்பையன் வழுத்துமகா்னே (நா)

சந்திரமதி வரலாறு கூறுதல்.

நொண்டிச்சிந்து.

1 காசிச்சுடலைகாத்து வருகின்ற
காவலரே யெனது கதைகேளும்
தேசராசர் முதலாகக் கைகட்டிச்
சேவித்தடி பணியப் பூவுலகில்

2 கன்னோசி யெனும் நாட்டை யாண்டிடுங்
காவலன் குலமக ளாயுதித்தேன்
மன்னனை மையோத்தி மகிபனை
மணம்புரிந்தினிமையாய் வாழ்ந்திருந்தேன்

3 மைந்தனிவனை யீன்றேன் கொடிய
மாதவனானவிசு வாமித்திரன்
தந்திரமாயையாலே நாங்கள்
தாபமடைந்தோம்வள நாடிழந்தோம்

4 காசிநகரை நோக்கிப் போகையில்
காளவிடமெனவே சீறிவந்து
ஏசியேநட்சத்திரய்யன் கடன்பொன்னை
ஈந்துபோவெனச்சொல்லி வேந்தன்கையில்

5 கிட்டியைக்கட்டி வாட்டி மனது
கிலேசமடைந்துருகப் பலவாறு
கஷ்டப்படுத்தலாலே அந்தக்
கடனுக்காய் வேதியர்க் கடிமைப்பட்டேன்

6 இறையுடன்வாது பேசி அந்தண
ரிவனையுமடிமையென் றழைத்துக்கொண்டார்
மறையவர் மனைபேக அவரை
மாலைபுனைந்தவளாங் காலகண்டி

7 பல பல வேலைசெய்யச் சொல்லிச்சொல்லிப்
பதை பதைத்துருகிட நிதம்வருந்தித்
தலைவிதியென்றும் நானும் அங்குநிதம்
தயங்கியே அவளிட்ட பணிபுரிந்து

8 அளித்தசூழ்தனை மகனும் நானும்
அமுதமெனப்பசியி லருந்தியுள்ளங்
களித்திருந்திடுநாளில் எந்தன்
காதல்மகனையந்த வேதியரும்

9 வனத்துக்கனுப்பிச்சமிதை தெர்ப்பை
வளமையுடனே கொண்டு வருகவென
இனத்துச்சிறுவருடனே சென்ற
இவனைப்பட அரவங் கடித்துவிட

10 ஆவியகலப்பார்த்துச் சிறுவர்வந்
தடுமைமனெக்குரைக்க மனங்கலங்கி
கூவியழுதுவேத வாயரைக்
கும்பிட்டுரைக்க அவ ரனுமதிமேல்

11 பாதகியிங்குவந்தேன் மாண்டிட்ட
பாலகனைக்கண்டுநான் பரதவித்தேன்
வேதனைமிகவடைந்தேன் சுட்டு
விடநினைந்தேந்தியிச் சுடலையுற்றேன்

12 தனலைவளர்த்துச்சேயை வைத்த
தருணத்தினீரென தருகடைந்தீர்
பிணத்தையுதைத்துத்தள்ளி என்னைப்
பேசாதும் பேசினீ ரேசியையா

13 என்குறையிதுவாகும் ஒருவா
றெடுத்துரைத்தேன் சினம் விடுத்திரங்கித்
தன்மையுடனிச்சேயை இன்று
தகனித்திடஉத்தாரந் தாருமையே

மயானத்தில் அரிச்சந்திரன் சந்திரமதியை வெட்ட விரும்புதல்.

அரிச்சந்திரன் கலித்துறை.

மானே யெனதுயி ரோவிய மேசந்த்ர மாமதிசெந்
தேனே திரவிய மேயமு தேசெய்த தீவினையோ
ஆனே றமலற்குஞ் சம்மத மோவிது மாகொடுமை
நானே யுனைவெட்டு நாள்வந்து தேயிந்த நானிலத்தே

சந்திரமதி.

நாத வரிச்சந்த்ர பூபதி யேதிரு நாடுவிட்டுங்
காதார மின்றியிவ் வாறழிந் தேங்கவன் ஞளிலந்த
வேதா விதித்த விதியிது வாமெனை வெட்டுமினிப்
பாதாரவிந்தம் பணிந்தே னுமைக்கொண்ட பாதகியே

விசுவாமித்திரர் சபதம் நிறைவேருதது பற்றிவருந்தல்.

திருவுற்றிலகுகங்கை என்ற வர்ணமெட்டு.

அரிச்சந்தி ரன்குணத்தைத் தெரிந்துகொள்ளாமலிகழ்ந்
தபத்தமொழிபுகல லாயினேன் செய்த
தபத்தையிழக்கமன மாயினேன் அணி
யாயமாயவன் தேவிபாலக
ளேடுமேமறு தேசமேகவும்
ஆபத்திழைத்தும்பய னில்லையே மிகக்
கோபத்தினர்க்குவருந் தொல்லையே
மனைவிமைந்தனை விற்றும் பறையற்கடிமைப்பட்டும்
மருவிச்சுடலைதன்னைக் காத்துமே மன
முருகச்சுதனிறக்கப் பார்த்துமே கொண்ட
வட்டவார்குழ லீட்டதேவியை
வெட்டநேரம துற்றுமேநிச
வசனமல்லாதொருபொய் பேசிலான் மிக
விசனமடைந்து மெலின ஏசிலான்
சடுத்தமுடனேயிந்த்ர சபையில் வசிட்டனுடன்
சபதமுரைத்ததறி யாமையே எந்தன்
தபசுகுறையவந்த தீமையே ஐயோ
சாலவேபழி காரணயின
னேயலாதனு கூலமேவிலன்
தயங்கித்தலைகுனிய லாச்சுதே உள
மயங்கித்திரியவிதி வாச்சுதே

அரிச்சந்திரன் பட்டாபிஷேகம்.

என்னடிநான்பெற்ற என்ற வர்ணமெட்டு.

தாரணியோர்க் கொருதாட்சி இன்றிமாட்சி யுடன்காட்சி அரிச்
சந்திர ராசனல் ஆட்சி செய
சந்த்ரமதி என்னுமகா
சுந்த்ரவதி மைந்தனோடே
தானிருந்து மகிழ்ந் தானே பல
மானிடருந்தொழத் தானே

ஐயோத்திநகரவராள சிட்டர்மீள துட்டர்மாள எங்கு
மக்கிரமங்களே தாளத் தினம்
அருமாதவ முனிவோர்களா
யினிதாகிய பலவாசிகள்
அன்புடனே சொலி யார்ந்தார் நகர்
மன்பதைகள் களி கூர்ந்தார்

மாதமும்மாரிகள் கொழிக்க வனஞ்செழிக்க அரசளிக்க வந்த
மாற்றலர்யாவரும் விழிக்க சந்த்ர
மதிலோகித னொடுபூவினில்
நெடுநாளிருந் தரசாண்டனன்
மாவரிச்சந்திர ராசன் சொலப்
பாவலன்சுப்பைய தாசன்

வாழ்த்து விருத்தம்.

மானிலம் வாழ்கவேத மறையவர் பிறரும்வாழ்க
வானிமையோர்கள் வாழ்க மகத்துவமுனிவர் வாழ்க
தேனினுமினிய தீஞ்சொல் தெளிதமிழ்ப் புலவர்வாழ்க
யானியற்றிய விந்நூலு மறிஞரும் வாழ்க மாதோ.

அரிச்சந்திரன் திருப்புகழ் காவடிச்சிந்து

சம்பூர்ணம்.

காமன் பண்டிகை எரிந்தகட்சி

மன்மதன் லாவணி.

துவாதசாந்த ஸ்தலவாசகர்,

ஸ்ரீமான் பழனிக்குமாரு சுவாமிகள் இயற்றியது.

இதில் காமன் பண்டிகையின் சிறப்பும், மதுரை மஹால் வர்ணனையும், பண்டிகை மேடையின் சிங்காரமும் லாவணி மெட்டுகளில் பாடியுள்ளது. படிக்கப்படிக்கத் தமாஷாய் இருக்கும்.

மன்மதன் இரதி தேவியாரிடம் விடைபெற்றுச் செல்லுங்கால் இருவருக்கும் ஏற்படும் தர்க்கம் விசித்திரமாயிருக்கும்.

இரதி புலம்பல் ஒப்பாரிகள் மிக்க உருக்கமாயிருக்கும். மன்மதன் எரிந்தகட்சிக் கேள்வி லாவணிகள் பாட்டிற் சிறந்தும் புராண ஆராய்ச்சிகள் நிறைந்துமிருக்கும். விலை அணா 6.

மூக்கவேளாரவர்கள் நூதன வர்ணமெட்டு

டிராமாச் சரித்திரங்கள்.

வெளியாகி விட்டது! **12**-ம் ஒரே புத்தகம் வெளியாகி விட்டது!

நண்பர்கள் வெகுநாளாக எதிர்பார்த்திருந்த புத்தம்.

முந்துங்கள்! புத்தகத்திற்கு முந்துங்கள்!!

இராமாயணம், சூர்ப்பநகைபங்கம், வாலிமோக்ஷம், இலங்காதகனம், நல்லதங்காள் சரித்ரம், அல்லியரசாணி சரித்ரம், மயில்ராவணன் சரித்ரம், மதுரைவீரன் சரித்ரம், துரோபதைவஸ்திராபஹரணம், கீசக சம்மாரம், புதிய வர்ணமெட்டு பார்வி அரிச்சந்திரன், வள்ளியம்மை சரித்ரம், முதலிய அற்புத சரித்திரங்கள் 12-ம் ஒன்று சேர்ந்தது.

தற்கால நாகரிக நூதன அற்புத வர்ணமெட்டுகளால் அமைக்கப்பெற்றது. விலை ரூ 1-4-0

விடாநகைப்பை விளைவிக்கும்

விநோதவிகட சிந்தாமணி.

நண்பர்காள்! இதுவரை விகடப்புத்தகங்கள் அனேகம் பார்த்திருப்பீர்கள். ஆயினும் இதைப்போல் பூராவும் விகடமாய் இராதென்பது திண்ணம். விலை அணா 4.

ஷை இரண்டாம் பாகம்.

இதில் விகடப்பிரசங்கத்திற்குரிய கதைகள் ஏராளமாய் அடங்கியுள்ளது. கதைகள் நினைக்குந்தோறும் சிரிப்பை உண்டாக்கும். விலை அணா 6.

கோமாளிப்பாட்டு விகடமாகவே இருக்கும் அணா 1.

ஸ்ரீ சிவசுப்பிரமணியக் கடவுள் திருவருள்பெற்ற

அருணகிரிநாத சுவாமிகள்

அருளிச் செய்த

திருப்புகழ்

பெரிது.

‘திருப்புகழ்’ என்னும் செஞ்சொற் பிரபந்தம் கருணையங் கட
லாகிய அறுமுகக் கடவுளின் அன்பிற்குகந்த தோத்திரம் என்
பது உலகப்பிரசித்தம்.

இந்நூலாசிரியரான அருணகிரிநாத சுவாமிகள் இயற்றி
திருப்புகழ்ப் பாடல்கள் அனேக ஆயிரம் என்பர். இவை முழுது
எவரிடத்தும் ஒருங்குசேரக் கிடைத்தல் அரிதாயின. இப்பாட
கள் கிடைத்த அளவில் ஆங்காங்கு புத்தகவர்த்தகர்களாலும் பக்
சிரோன்மணிகளாலும் வெளிப்படுத்திய புத்தகங்களைக் கண்ணுற்
எமது நண்பரும் சாட்சாத் முருகபிரானது பக்த சிரோமணி
மாகிய ஸ்ரீமான் மு. ரா கந்தசாமிக்கவிராயரவர்கள் பெரித
பிழைபாடுகளையும், பாடபேதங்களையும், சந்தச் சிதைவுகளையு
பாடல்களின் பொருள் வகையிலும், சொல்வகையிலும் ஏற்ப
டுள்ள ஐயப்பாடுகளையும் சகிக்கப் பெறுதவராய் இதனைச் சுத்த
பிரதியாக்கி வெளியிடுதல் புண்ணியமாம் எனக்கருதி அநேக வ
டங்களாய்ப் பற்பல இடங்களிலும் உள்ள பல பழய எட்டுப் பிர
களைப் பொறுக்கி, அவைகளை மிக்க சிரத்தையுடன் உற்று நோக்கி
மதுரம் பழுத்துத் தேன்துளிக்கும் சந்தச்சுவை வாய்ந்து, படி
பாருள்ளத்தையும் கேட்பாருள்ளத்தையும் பரவசப்படுத்திப்பேரா
னந்தப் பெருக்கில் ஆழ்த்தும் சிறப்பு வாய்ந்த பாடல்களாய்
ஒருங்கு சேர்த்தும், ஒவ்வொரு பாடல்களின் தலைப்பிலும் சந்த
குழிப்புகள் சேர்த்தும், அரும்பதப் பொருள் விளக்கியும் உதவ
பெற்றுச் சுத்தப்பிரதியாய் வெளியிட்டிருக்கின்றேம். இதுவன
அச்சிடப்பெறுத பல அரிய பாடல்களும் இதில் அடங்கியுள்ள

முதல் பாகம்	641	பாடல்களடங்கியது		2—8—0
2—ம் பாகம்	611	ஷை	,,	2—8—0

இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்,
புத்தகவியாபாரம் புதுமண்டபம், மது